Registered No. M. 4018.

MADRA

# வைத்திய சந்திரிகா.

ஓர் உயர்தர தமிழ் மாதப்பத்திரிகை.

பிரதி ஆங்கிலமாதம் முதல்வாரத்தில் வெளிவரும்

**Vol. 6** | **July 1944** | **No. 7**

**விஷய சூசிகை,** **பக்கம்**

யோகரத்நாகரம் 161-166

| சந்தா விகிதம். | விளம்பர விகிதம். |
|---|---|
| வருஷ சந்தா:— | மாதம் 1-க்கு பக்கம் 1-க்கு ரூ 8 |
| உள் நாட்டுக்கு ரூ. 2 | ,, ,, ½-க்கு ரூ 4 |
| வெளிநாட்டுக்கு ரூ. 3 | ,, ,, ¼-க்கு ரூ 2 |

கிடைக்குமிடம்:—

**Pandit, S. NARAYANA IYENGAR.**

**Editor and Publisher.**

No. 2, Police Station West Lane, Madura.

[விலை **0—3—0**

டஸ்வர் பிரஸ், மதுரை—44.

குறிப்பு,—1944ஞு ஜுன்மீ 12உயிட்ட ஓர் சர்க்கார் அறிக்கைப்படி எல்லா சஞ்சிகைகளுக்கும் ஓர் தடை ஏற்பட்டுள்ளது, சஞ்சிகைகளின் பக்கங்களின் 100-க்கு 30% தான் இனி அதாவது ஜுன் 12உயிலிருந்து வெளிவரமுடியும், தத்காலமுள்ள காகிதப் பஞ்சத்தை யொட்டி சர்க்கார் இந்த உத்திரவு பிறப்பிக்கவேண்டியது அவசியமாயிற்று என்று ஷை அறிக்கை கூறுகிறது. ஆகவே சந்திரிகை இனி சிறிய உருவத்தில் தான் வெளிவரமுடியும், இந்த உத்திரவை யொட்டி சில மாதாந்த சஞ்சிகைகள் வெளிவருவது நின்றுவிட்டதாக பத்திரிகைகளில் பார்க்கிறோம், ஆகவே கால நிலைமை சீர்படும்வரையில் நமது சந்தாதார்கள் சற்று பொறுமையுடன் இருக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். பத்திராதிபர்.

**திருச்சி ஆயுர்வேத சபை**—1944ஞு மேமீ 28உ ஞாயிற்றுக்கிழமை மாலை 4-30-க்கு ஷை சபையின் ஆதரவில் இவ்வருஷத்திய ஆறுவது மாதாந்த மீட்டிங் திருச்சி ஆயுர்வேதயூனியன் கட்டிடத்தில் நடைபெற்றது, முதலில் பகவான் தன்வந்தரியின் பூஜையும் பிரார்த்தனையும் நடந்தது, பிறகு ஸ்ரீமான் T. V. ஜயராம சாஸ்திரிகள் அவர்கள் "உன்மாதம்" என்னும் ரோகத்தைப் பற்றி விரிவாக உபன்யஸித்தார்கள், பிறகு மெம்பர்களுக்குள் சர்ச்சை இருந்தது, கடைசியாக மீட்டிங்குக்குத் தலைமை வகித்த ஸ்ரீமான் L. V. மகாதேவ சர்மா வைத்ய விசாரத் ஸ்ரீ ஆயுர்வேத சிரோமணி அவர்கள் தலைமைப் பிரசங்கத்தைச் செய்தார்கள் மீட்டிங்கிற்கு அநேக மெம்பர்கள் வந்திருந்தார்கள், வந்தனோபசாரத்துடன் கூட்டம் முடிவுற்றது.

T. S. ஈஸ்வரன்,
ஸபாமந்திரி.

யந்திரமாக 12 மணி எரித்து எடுத்துக்கொள்ளவும். வேறு முறை —லிங்கத்தை எலுமிச்சம்பழரஸம் விட்டு மூன்றுமணி அரைத்து உலர்த்தி ஓர் மண்சட்டியில் போட்டு மேல்சட்டி கவிழ்த்து மூடி வாய்க்குச்சீலைமண் செய்து காயவைத்து அடுப்பேற்றி 12 மணி எரித்து ஆறவிட்டு மேல்சட்டியிலிருக்கும் ரசத்தை எடுத்துக்கொள்ளவும். இதற்கு வாலைரஸம் எனப்பெயர். இவ்விதம் எடுக்கப்படும் ரசத்தில் தோஷங்கள் இரா. ஆகையால் சுத்திவேண்டியதில்லை. அப்படியே மருந்துகளில் உபயோகிக்கலாம். ரசத்திற்கு முகம் உண்டுபண்ணுதல். அதாவது ரசத்திற்கு வாய் உண்டாகிவிட்டால் அதில் கொடுக்கும் உலோஹங்களை அது விழுங்கிவிடும். இது நூல்களில் கூறப்பட்டபோதிலும் அனுபவித்தவர் கிடையாது. ஷட்பிந்துப்புழு என்ற ஓர் புழுவையும் ரசத்தையும் சேர்த்துக்கல்வத்திலிட்டு உப்புப் புளிப்பும் சேர்த்து மூன்றுநாள் அரைக்க எல்லா உலோகங்களையும் விழுங்கும்படி ரசத்திற்கு முகமுண்டாகும், பசும்புல் தரைகளில் ஓர் வகை பூச்சியைப்பார்க்கலாம், அது மேல்பாகம் முழுவதும் சிவப்பாக இருக்கும், ஆறு கருப்பு புள்ளிகள் அதில் காணப்படும். இதை ஷட்பிந்துகீடம் என்கின்றனர். மழைகாலத்தில் பசுப்புல்தரைகளில் காணப்படும் இந்திரகோபம் என்ற பட்டுப்பூச்சியின் ஓர் பேதமெனச்சிலர் சொல்லுகின்றனர். கொஞ்சம் இந்துப்பையும் சேர்த்துக்கொண்டு எலுமிச்சம்பழரஸம் விட்டரைக்கவேண்டும், வேறு முறை—இந்துப்பு, முருங்கைவேர், மயில்துத்தம், கடுகு, மிளகு, இவைகளைச்சமயிடை எடுத்துப்பொடிசெய்து அந்தப்பொடியின் சமயிடை ரசத்தைச்சேர்த்து மூன்றுநாள் அரைத்துப்பிறகு ஷை சரக்குகளைக் கஷாயஞ்செய்து அந்தக்கஷாயத்தில் ஒருநாள் தோளாயந்திரமாக எரித்து எடுக்க அந்த ரசத்திற்கு முகமுண்டாகி உலோகங்களை விழுங்கும். குறிப்பு இவ்விதம் செய்துபார்த்ததில் முகம் உண்டாகவில்லை, தகுந்த குருவின் உபதேசமின்றி இந்த "முககாரணம்" சித்திக்காது என நூல்கள் கூறுகின்றன, இனி ஷட்குண கந்தகஜாரண முறை கூறப்படுகின்றது—முன்சொன்னபடி "தப்தகல்வம்" செய்து அதில் ரசத்தைவிட்டு கந்தகப்பொடியைக்கொஞ்சம் கொஞ்சமாகப் போட்டு ரசத்திற்கு ஆறு மடங்கு [illegible] ஜீர்ணமாகும்படி செய்ய

வேண்டும். குறிப்பு—ஷட்குண கந்தகஜாரணம் என்பது தற்கா லத்தில் பலர் செய்துவருகின்றனர், செய்வதும் சுலபம், இப்பொழுது சொன்னவழி அவ்வளவு சுகமல்ல, முன்சொன்னபடி குழிபறித்து அதில் உமியைக்கொட்டி நெருப்புவைத்து அதன்மேல் கல்வத்தை (இரும்பு கல்வம் நல்லது) வைத்து கல்வத்தில் சூடு ஏறின பிறகு அதில் தேவையான ரசத்தைப்போட்டு அதில் கந்தகப்பொடியைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தூவிவரவேண்டும், கல்வத்திலுள்ள சூட்டால் அந்த கந்தகம் வெந்துபோகவேண்டும், பிறகு கொஞ்சம் கொஞ்சமாகத்தூவி வரவேண்டும், தூவின பொடி எரிந்துபோன பிறகே வேறு பொடி தூவவேண்டும், ரசத்தைக் கிண்டிக் கொடுக்கக்கூடாது, சூடு குறைந்தால் கல்வத்தை அப்புறப்படுத்தி மறுபடியும் புது உமியைப் போட்டுக்கொள்ளவேண்டும், இவ்விதம் ஆறு மடங்கு கந்தகப்பொடி எரிந்துபோகும் வரையில் செய்யவேண்டும். இதை ஒரே நாளில் செய்து முடிக்கவேண்டுமென்ற அவசியம் கிடையாது, பல நாட்களில் பூர்த்திசெய்யலாம், வேறு முறை கந்தக ஜாரணம்—கச்சபயந்திரத்தால் கந்தகஜாரண முறை இனி சொல்லப்படுகிறது, ஓர் மண்பானையில் நிறைய தண்ணீரைக் கொட்டவும், அந்தப்பானையின் வாயில் ஓர் மண் வாணலியை நிமிர்த்து வைக்கவும், அதாவது அந்த வாணலியின் அடிபாகம் மாத்திரம் கொஞ்சம் தண்ணீரில் படும்படி இருக்கவேண்டும், அந்த வாணலியின் உள்பாகத்தில் ரசம்விட்டால் குவியலாக இருக்கும்படி ஓர் பாத்திவட்டமாகக்கட்ட வேண்டும். அந்த வாணலியில் மண்ணால் பாத்திகட்டியே வேகவைத்துக்கொண்டு வரும்படி குயவனிடம் ஏற்பாடு செய்து தயாரித்து விடுவது நலம், அந்தப்பாத்தியில் தேவையான ரசத்தை விடவும், ரசத்தின்மேல் சமஎடை கந்தகத்தூளைப் போட்டு ஓர் தகுந்த வாணலியைக் கவிழ்த்து மூடி அடியிலுள்ள பானையின்வாயில் பொருந்தும்படி வைத்து வாய்க்குச்சீலைமண்செய்து காயவைத்துப் பிறகு மேல்வாணலியின்மேலும் அக்கம்பக்கங்களிலும் எருவை யடுக்கிப் புடமிடவும், 5, 6 எருக்கள் போதுமானது, சட்டியின் அளவுக்குத் தக்கபடி கொஞ்சம் எருக்களை அதிகப்படுத்திக்கொள்ளலாம், ஆறவிட்டுமேல்வாணலியை விலக்கி மறுபடியும் கந்தகப்பொடியை முன் போல போட்டு மூன்[illegible] செய்யவும், இவ்விதம் ஆறுதடவை

செய்ய ஷட்குண கந்தகஜாரணம் ஆகும். குறிப்பு—இது சுலப மான வழி, நாம் இந்த வழியிலேயே தயாரிக்கிறோம். இதிலுள்ள கஷ்டம் சுவல்பம், அதாவது அடியில் இருக்கும் ஜலத்தில் வாணாய் பட்டுக்கொண்டிருந்தால் அதிலிருக்கும் ரசம் அப்படியே யிருக்க ஹேதுவாகின்றது, அதன்மேலுள்ள கந்தகத்தில் நெருப்பு தாக்கி அது உருகிப் புகைந்து போகவேண்டும், ரசத்துடன் சேர்ந்திருக் கும் கந்தகம் மாத்திரம் புகைந்துபோவதால் ரசம் அப்படியேயிருக்க ஹேதுவாகின்றது, மேலே போடும் புடம் எரு குறைந்துபோனால் கந்தகம் முழுவதும் மடிவதில்லை. அதாவது புகைந்து உருகிப் போவதில்லை, அந்த சமயத்தில் மறுபடியும் புடம்போட்டு அந்த கந்தகம் பூர்ணமாக உருகி மடிந்த பிறகுதான் இரண்டாவது தடவை கந்தகம் சேர்க்கவேண்டும், இரண்டாவது தடவை மடியாவிட்டால் மூன்றாவது தடவையும் செய்யவேண்டும், ஒரு தடவை சேர்த்த கந்தகம் பூரணமாக மடிவதற்கு 4, 5 புடங்கள் போட்டாலும் குற்ற மில்லை, இனி கந்தகஜாரணத்தின் குணம் சொல்லப்படுகிறது— ரசத்திற்கு சமயிடை கந்தகத்தை ஒருதடவை ஜாரணம் செய்தால் நோய்களைப் போக்கும். இரண்டுதடவை ஜாரணம் செய்தால் க்ஷய நோய் போம், மூன்றுதடவை ஜாரணம் செய்தால் காது விருத்தி செய்யும், நான்குதடவை செய்தால் நல்லகாந்தியை யளிப்பதுடன் சகல நூல்களிலும் வல்லமை தரக்கூடிய புத்திகூர்மையைத்தரும், ஐந்துதடவை செய்தால் சித்தியைக்கொடுக்கும், ஆறு தடவை செய் தால் மரணத்தை விலக்கி ரஸாயனமாகும், ஒரு நாளாவது ரஸத்து டன் கந்தகத்தைச் சேர்த்து (ஜாரணம்) செய்தால் அவனுக்குச் சகல பாபங்களும் போம். குறிப்பு—ரஸகந்தகங்களைச் சேர்ப்பது புண்யமென நூல்கள் கூறுவதை யொட்டி இவ்வசனம் இங்கு எழு தப்பட்டுள்ளது. இதைப்பற்றிய விவரங்கள் சிவாகமங்களில் காணப் படுகின்றன, இனி ரஸபந்தனம் சொல்லப்படுகின்றது, அதாவது ரஸம் பிறவியில் ஓடும் சுபாவமுடையது, அதை வெண்ணெபோல விழுதாக்கி ஓடாமல் செய்வதை இங்கு பந்தனம் எனப்படுகிறது, பந்தனம் செய்தபிற்கு அதை மாரணம், (பஸ்மம்) செய்யவேண்டும், பந்தனம் என்பது கடினமான விஷயமல்ல. மாரணமே கடினமா

கும், பந்தனம் செய்தபிறகு அந்த ரஸம் முத்துபோல கெட்டியாக ஆகிவிடும், அதை "ரஸமணி" என்பர், ரஸமணி செய்வது கஷ்டமல்ல, ரஸமணியால் நன்மையும் கிடையாது, வாழைக்கிழங்கு, பேயத்தி, சதுரக்கள்ளி, க்ஷீரகாகோலி, சிகப்புச்சாரணத்தி, சிவலிங்கி, பொன்னாங்கண்ணி, மணத்தக்காளி, இவைகளின் ரசத்தால் ரஸத்தைக் கல்வத்திலிட்டு அரைக்க மெழுகாகும், குறிப்பு— பேயத்தி என்பது பிரசித்தம் சுலபம், அதன் பாலை எடுத்துக் கொள்ளவேண்டும், சதுரக்கள்ளியிலும் பாலை எடுக்கவேண்டும், க்ஷீரகாகோலி தற்காலம் வடதேசங்களில் கிடைக்கிறது, அதைக் கஷாயமிட்டுக் கொள்ளவேண்டும், சிகப்புச் சாரணத்திவேரைக் கஷாயமிட்டுக் கொள்ளவேண்டும், சிவலிங்கி என்பது வடதேசங்களில் கிடைக்கிறது, அதையும் கஷாயமிட்டுக் கொள்ளவேண்டும், முறைப்படி இந்த வஸ்துக்களால் வகைக்கு ஒரு மணி வீதம் அரைக்கவும், வேறு முறை—ஸ்திரீகள் வீட்டிற்கு விலக்காக இருக்கும் காலங்களில் அதாவது அந்த மூன்று நாள்களிலும் தேவையான ரஸத்தை ஓர் வஸ்திரத்தில் முடிந்து நீர் த்வாரத்தில் வைத்திருந்தால் ரஸம் வெண்ணைபோலாகும். குறிப்பு—இம்முறை பல நூல்களில் சொல்லப்பட்டிருந்த போதிலும் இதை அனுபவத்திற்குக்கொண்டுவந்ததாகத் தெரியவில்லை. வேறு முறை—மண் உண்ணிப்பூச்சி (இதையே பூநாகமென்பர்) நாயுருவிவேர், இவை இரண்டையும் சமயிடையாக எடுத்துத் தண்ணீர்விட்டு சந்தனம்போல கல்வத்தில் அரைத்து அந்த விழுதால் குகையின் உள்பக்கம் பூசிக் காயவைத்து அதில் $1\frac{1}{4}$ தோலா ரஸத்தை விட்டு குகை வாயை வில்லால்மூடிச் சீலமண்செய்து தணலில் அதை வைக்கவும், தணல் ஆறி எடுத்துப்பார்க்க ரஸம் கட்டியிருக்கும். குறிப்பு—மண் உண்ணிப்பூச்சி என்பது சாதாரணம், எல்லாரும் அறிந்ததே, செம்மண் காட்டில் கிடைக்கும் பூச்சி உயர்ந்தது, ஏனெனில் இதில் தாமிர சத்து அதிகம், அந்தப்பூச்சிகளைக் கொண்டுவந்து அதன் வயிற்றிலுள்ள மண்ணை நீக்கவேண்டும், அதற்கு உபாயம்—அந்த பூச்சிகளை ஓர் சட்டியிலிட்டு அதில் பூச்சி முழுகும்படி பசம்பால் விட்டுவைத்தால் அவை பச்சிகள் பாலில் மண்ணைக்கக்கிவிடும், பிறகு பூச்சிகளைக்

கழுவி எடுத்துக்கொள்ளவும், நாயுருவியில் சிகப்பு நாயுருவி நல்லது, தட்டான் குகையில் உள்பாகத்தில் ஷை விழுதைப் பருமனாகப்பூசி காயவைக்கவும், மேல்மூடிக்கும் உள்பாகத்தில் ஷை விழுதைப்பூசி காயவைக்கவும், காய்ந்தபிறகு குகையில் முன்சொன்ன அளவுக்கு அதிகப்படாமல் ரசத்தை விடவும், எடை குறைவாக இருந்தால் குற்றமில்லை, எடை அதிகப்படக்கூடாது, பிறகு கரிகளைக்கொண்டு தணல்செய்து அந்தத்தணலின் நடுவில் குகையை வைக்கவும், குகைக்குமேல் தணல் தேவையில்லை, குகையின் அடிபாகம் மாத்திரம் தணல்பட்டால் போதுமானது, கரிக்கு அளவு தேவையில்லை. குகையின் உருவத்திற்குத்தக்க விதமாக சுமாராக எடுத்துக்கொள்ளவும், பத்தரஸத்தின் குணம்—வாயில் அடக்கிக்கொண்டால் முகரோகங்கள்போம் சரீரத்தில் சேர்ந்தால் அதாவது ரக்தத்துடன் கலந்தால் ஜரைமரணங்களை விலக்கும், கத்தி முதலிய ஆயுதங்களால் விரணம் முதலியவை உண்டாகா, தாதுபுஷ்டிக்கு நல்லது, யோகாப்யாசிகளுக்கு சரீரம் வாலிபப்பருவத்தையடையும், இனி ரஸமாரணம் அதாவது ரஸபஸ்மமுறை சொல்லப்படுகிறது—நாயுருவியின் விதையால் இரண்டு குகை தயாரித்துக்கொள்ளவேண்டும், அதாவது நாயுருவியின் விதையைத் தண்ணீர்விட்டுக் கல்வத்தில் அரைத்து வாய் பொருந்தும்படி இரண்டு குகைகள் தயாரிக்கவேண்டும், அவ்விரண்டையும் காயவைக்கவேண்டும், நன்றாகக் காய்ந்தபிறகு ஒரு குகையில் அடியில் கண்டசூர்ணத்தைக்கால்குகை போடவேண்டும்; சூர்ணமாவது—துப்பைப்பூ, வாய்விளங்கம், பீகருங்காலி, அதாவது நாற்றமுள்ள கருங்காலி வைரத்தூள், இவைகளைச்சமயிடை எடுத்துப்பொடிசெய்து கொள்ளவும், ரஸத்தை பேயத்திப்பால்விட்டு அரைக்க மெழுகாகும், அதை உருட்டி ஷை சூர்ணத்தின்மேல்வைத்து குகை நிறைய ஷை சூர்ணத்தைப் போட்டு மேல்குகை கவிழ்த்து மூடி வாய்க்குச்சீலைமண் செய்யவேண்டும், மேல் குகையிலும் ஷை சூர்ணத்தைப் போட்டு நிரப்பிக்கொள்ளவேண்டும், இல்லாவிட்டால் குகை அசையும்பொழுது ரஸவிழுதும் சூர்ணமும் தாறுமாறாகிவிடும், ஆகவே எவ்வளவு அசைந்தாலும் ரஸவிழுது நிலைமாறாமல் இருக்கும்படி இரண்டு குகைகளிலும் சூர்ணத்தை நிரப்பிக்கொள்ளவேண்டும், ஷை குகை காய்ந்த

பிறகு அந்த குகை பொருந்தக்கூடிய ஓர் மண் அகலில் வைத்து அகலின் வாயைமூடிச் சீலைமண்செய்து காயவைத்துப் பிறகு கஜபுடமிடவும், ரஸம் நெல்பொரிபோல பொரிந்து இருக்கும். எடுத்து பொடிசெய்துகொள்ளவும். வேறுமுறை பஸ்மம்—ரஸம், கந்தக இவைகளைச் சமயிடை எடுத்து ஆலம்பால்விட்டு அரைத்து அந்த விழுதை ஓர் மண்வாணலியில்போட்டு அடுப்பேற்றி மந்தாக்னியாக எரித்து ஆலம்விழுதால் கிளரிக்கொடுத்துக்கொண்டு இவ்விதம் 2 மணி எரிக்க ரஸம் பஸ்மமாகும். இரண்டு குன்றியிடை வெற்றிலையில் உட்கொள்ள சரீரபுஷ்டி, அக்னிபலம், இவைகளைச்செய்யும். குறிப்பு—ரஸபந்தனம், ரஸமாரணம், இவைகளில் ரஸத்திற்கு தக ஜாரணத்தை முதலில் செய்யவேண்டும், இல்லாவிட்டால் பந்த மாரணங்கள் சித்திக்கா, மாரணம் முதல் முறையில் ஒரு தோலாவுக்கு அதிக எடையில் ரஸத்தை எடுத்துக்கொள்ளக் கூடா. நூலில் சொல்லியுள்ளபடி கஜபுடமிட்டால் ரஸம் ஓடிவிடுகின்றது ஆகவே லகுபுடம்தான் போடவேண்டும் லகுபுடமிட பழக வேண்டும். ஆகவே முதல்முறைசற்று கடினமானது, இரண்டாவது முறை மிகச்சுலபம், அவ்விதம் செய்வதுதான் நமது வழக்கம் சிறு தீயிட்டு எரிக்கும்போது முதலில் கந்தகம் உருகிப் பிறகு நெருப்புபற்றி எரிந்து பிறகு ரஸம் பஸ்மமாகிறது, பஸ்மம் நல்ல வெளுப்பாகவிராது, இம்முறை வாய்பிடிக்காது, ரஸம், வீரம் இவைகளுடன் சரியிடை கந்தகம் சேர்ந்துவிட்டால் வாய்பிடிக்காது என்ற விஷயத்தை சந்திரிகையில் பலதடவை விளக்கியுள்ளோம். ஆகவே குழந்தைமுதல் எல்லோருக்கும் உபயோகிக்கலாம், ரஸத்தைக்கஜபுடமிட்டு ஓடாமல் வைத்த எடை இருந்துவிட்டால் அது சர்வோத்தமம், நூல்கள் அவ்விதம் கூறியபோதிலும் இது அனுபவத்திற்கு வந்ததில்லை, லகுபுடங்களில் தயாராகிய பஸ்மம் மறுபடியும் நெருப்பிலிட்டால் ஓடிவிடுகின்றது, ஆகவே லகுபுடத்தில் தயாரிக்கும் ரஸபஸ்மங்கள் வியாதிகளுக்கு நன்மைசெய்தாலும் கல்பமுறைக்கு உதவாது, அவ்விதமே எரிப்பு முறைகளில் தயாராகும் பஸ்மதாரங்களும் கல்பமுறைக்குச் சற்றும் உதவாது, வியாதிகளில் வேகமாகக்குணம் கொடுப்பதில்லை, இனி குப்பி எரிப்பில் தயாரிக்கப்படும் ரஸசிந்தூர்முறை சொல்லப்படுகிறது—(1) ரஸம் தோலா 8, கந்தகம் தோலா இரண்டு, நவச்சாரம் தோலா அரை, இவை

| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |